**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8102064

1. District : மாவட்டம் திருச்சி PS: காவல்நிலையம் V&AC, TRICHY Year: ஆண்டு 2018 FIR No.: மு.த.அ. எண் 03/18 Date: நாள் 23.03.18

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(e) of P.C. Act, 1988

   (ii) Act சட்டம்: Indian Penal Code Sections பிரிவுகள்: 109 IPC

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 2013 Date to : நாள் வரை 2018

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.03.2018 Time : நேரம் 1000hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கிடைக்கப்பெற்ற ரகசிய தகவல்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி திருச்சி, கரூர், கோயமுத்தூர், சென்னை மாவட்டங்கள்

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ப. அருள்ஜோதி (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 04/10/74 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் காவல் ஆய்வாளர் (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, திருச்சி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1. திரு பி. முருகானந்தம், S/o பிச்சைமுத்து, இணை போக்குவரத்து ஆணையர், போக்குவரத்துத் துறை, கோயம்புத்தூர் மண்டலம், பொறுப்பு நிர்வாகம், போக்குவரத்து ஆணையர் அலுவலகம், சென்னை.
   2. திருமதி. [illegible], W/o. முருகானந்தம், 23A, [illegible], மன்னார்புரம், திருச்சி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   —

9. **Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)**
**களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)**

—

10. **Total value of properties stolen / involved :**
**களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு** —

11. **Inquest Report / Un-natural death Case No. if any:** —
**பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்**

12. **FIR Contents (Attach separate sheet, if required) :**
**முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)**

கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

சேகரித்த ரகசிய தகவலின் அடிப்படையில், விசாரணை மேற்கொண்டதில், எதிரி திரு.பி.முருகானந்தம் என்பவர் கடந்த 5 ஆண்டுகளாக போக்குவரத்து இணை ஆணையராக கோயம்புத்தூர் மண்டலத்தில் பணியாற்றி வருகிறார். மேலும், கடந்த 01.10.2017 அன்று முதல் கூடுதல் பொறுப்பாக நிர்வாகம், போக்குவரத்து ஆணையர் அலுவலகம், சென்னையில் பணியாற்றி வருகிறார். மேற்படி எதிரி ஊழல் தடுப்பு சட்டம் 1988 பிரிவு 2(c)-ன் படி பொது ஊழியர் ஆவார்.

இவரது சொந்த ஊர், கரூர் மாவட்டம், நாகம்பள்ளி கிராமத்தை சேர்ந்த மலைக்கோவிலூர் ஆகும். இவரது தந்தை மற்றும் தாயார் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் ஆவர். இவரது தந்தை சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் இறந்துவிட்டார். இவரது தாயார் தற்போது இவருடன் வசித்து வருகின்றார். இவரது தாயாருக்கு ஓய்வூதியம் கிடைத்து வருகிறது.

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. **Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed** Tr. G. SAKTHIVEL **Rank** DSP **to take up the Investigation / Refused Investigation / transferred to PS**……………………………………**on point of jurisdiction.**

**எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ……………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.**

**FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.**
**மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.**

23/03/2018

14. **Signature / Thumb Impression of the Complainant / Informant**
**குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு**

**Signature of the Officer in-charge, Police Station**
**காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்**

D. ARUL JOTHI

15. **Date & Time of despatch to the court:**
**நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்**

**Name: பெயர்** ………………………
**Rank: நிலை** ………………… **No. எண்** ………
INSPECTOR OF POLICE, V&AC, TRICHY.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

*திருச்சி ஊ.த.க. பிரிவு கு.எண்.03/2018-ன் முதல் தகவல் அறிக்கை தொடர்ச்சி.......*

எதிரி திரு.முருகானந்தத்தின் மனைவி திருமதி.லீலாவதி அவர்கள் அரசு அல்லது தனியார் நிறுவனங்களில் வேலை செய்து மாதாந்திர சம்பளமோ அல்லது வேறு தொழில் எதுவும் செய்து அதன் மூலம் வருமானம் எதுவுமோ பெறவில்லை. இவர் குடும்பத் தலைவியாக மட்டும் உள்ளார். இவர்களுக்கு இரண்டு மகன்கள் ஒருவர் பெயர் எம்.கிஷோர், மற்றொருவர் பெயர் எம்.கௌதம் மற்றும் ஒரு மகள் எம்.தீப்தி ஆகியோர் உள்ளனர். இவர்களில் மூத்த மகன் எம்.கிஷோர் என்பவர் பொறியியல் பட்டயப் படிப்பு படித்துவிட்டு, அரசு வேலை தேடிக் கொண்டு, போட்டித் தேர்வுகளில் பங்கேற்று வருகின்றார். இரண்டாவது மகன் கௌதம் என்பவர் தனியார் பொறியியல் கல்லூரியில் பொறியியல் பட்டயப் படிப்பு படித்து வருகின்றார். மகள் தீப்தி என்பவர் தனியார் பள்ளியில் 11-ஆம் வகுப்பு படித்து வருகின்றார்.

எதிரி திரு.முருகானந்தத்திற்கு, அவரது தாயாரின் ஓய்வூதியம் மற்றும் அவரது மாதாந்திர சம்பளத்தைத் தவிர வேறு எந்தவித வருமானமும் கிடையாது. குறிப்பாக இவரது குடும்ப உறுப்பினர்கள் மூலமாக எந்தவித வருமானமும் இவருக்கு இல்லை. எதிரி திரு.முருகானந்தம் மற்றும் அவரது மனைவி திருமதி.லீலாவதியின் உடன் பிறந்தவர்கள் எவரும், இவர்களைச் சார்ந்தோ, அவர்களைச் சார்ந்து இவர்களோ வாழவில்லை.

எதிரி திரு.முருகானந்தம் அவருடைய மனைவி மற்றும் குடும்ப உறுப்பினர்கள் பெயரிலும் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் வாங்கியுள்ளதாக சேகரித்த ரகசிய தகவலின் அடிப்படையில் எதிரி திரு.முருகானந்தம் 2013 முதல் 2018 வரையிலான குறியீட்டு காலத்தில் வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்துள்ளார்.

(1) 2013 ஆம் ஆண்டுக்கு முன்பாக எதிரி திரு.முருகானந்தம் அவரது பெயரிலும், அவருடைய மனைவி மற்றும் குடும்ப உறுப்பினர்கள் பெயரிலும் சேர்த்துள்ள அசையும் மற்றும் அசையா சொத்துக்களின் மதிப்பு ரூ.6,58,266/- ஆகும்.

(2) 2018 ஆம் ஆண்டு வரை எதிரி திரு.முருகானந்தம் அவரது பெயரிலும், அவருடைய மனைவி மற்றும் குடும்ப உறுப்பினர்கள் பெயரிகளிலும் சேர்த்துள்ள வீட்டு காலி மனைகள், வணிக வளாக கட்டிடம், வைப்பு தொகைகள், வாகனங்கள் வாங்கியது ஆகியவைகளின் மதிப்பு ரூ. 2,59,10,266/- ஆகும்.

(3) எதிரி திரு.முருகானந்தம் 2013 முதல் 2018 வரையிலான குறியீட்டு காலத்தில் அவருக்கு கிடைக்கப் பெற்ற மாதாந்திர சம்பளம், வங்கியில் பெற்ற கடன், எதிரியின் மனைவி பெயரில் உள்ள வணிக வளாக கட்டிட வாடகை உட்பட கிடைக்கப் பெற்ற வருமானம் ஆகியவைகளின் மதிப்பு ரூ.93,56,000/- ஆகும்.

(4) எதிரி திரு.முருகானந்தம் 2013 முதல் 2018 வரையிலான குறியீட்டு காலத்தில் அவருக்கும் அவரது குடும்ப உறுப்பினர்களின் நுகர்வோர் செலவு, வங்கி கடன் திரும்ப செலுத்திய செலவு, வீடு கிரையம் பெற்ற பத்திர செலவு, மாநகராட்சியில் கட்டிட அனுமதி பெற செலுத்திய செலவு ஆகியவைகளின் மொத்த செலவுகள் ரூ.79,87,288/- ஆகும்.

## அட்டவணை-1

| | | |
|---|---|---|
| 01.01.2013 அன்று சந்தேக அலுவலரின் மொத்த சொத்து மதிப்பு | ரூ. | 6,58,266 |

## அட்டவணை-2

| | | |
|---|---|---|
| 23.03.2018 அன்று சந்தேக அலுவலரின் மொத்த சொத்து மதிப்பு | ரூ. | 2,59,10,266 |

## அட்டவணை-3

| | | |
|---|---|---|
| 01.01.2013 முதல் 23.03.2018 வரையிலான காலத்தில் சந்தேக அலுவலருக்கு கிடைத்துள்ள மொத்த வருமானங்கள் தோராயமாக | ரூ. | 93,56,000 |

## அட்டவணை-4

| | | |
|---|---|---|
| 01.01.2013 முதல் 23.03.2018 வரையிலான காலத்தில் சந்தேக அலுவலர் செய்துள்ள மொத்த செலவுகள் | ரூ. | 79,87,288 |

## அட்டவணை-5

| | | |
|---|---|---|
| 23.03.2018 அன்று சந்தேக அலுவலரின் மொத்த சொத்து மதிப்பு (அட்டவணை-2) | ரூ. | 2,59,10,266 |
| 01.01.2013 அன்று சந்தேக அலுவலரின் மொத்த சொத்து மதிப்பு (அட்டவணை-1) | ரூ. | 6,58,266 |
| மேற்படி 5 ஆண்டு காலத்தில் சந்தேக அலுவலர் சேர்த்துள்ள மொத்த சொத்துக்களின் தோராய மதிப்பு | ரூ. | 2,52,52,000 |

## அட்டவணை–6

| | |
|---|---|
| 01.01.2013 முதல் 23.03.2018 வரையிலான காலத்தில் சந்தேக அலுவலருக்கு கிடைத்துள்ள மொத்த வருமானங்கள் தோராயமாக (அட்டவணை-3) | ரூ. 93,56,000 |
| 01.01.2013 முதல் 23.03.2018 வரையிலான காலத்தில் சந்தேக அலுவலர் செய்துள்ள மொத்த செலவுகள் (அட்டவணை-4) | ரூ. 79,87,288 |
| மேற்படி 5 ஆண்டு காலத்தில் சந்தேக அலுவலர் சேர்த்துள்ள மொத்த சேமிப்பு தோராயமாக | ரூ. 13,68,712 |

## அட்டவணை–7

| | |
|---|---|
| 01.01.2013 முதல் 23.03.2018 வரையிலான காலத்தில் சந்தேக அலுவலர் சேர்த்துள்ள மொத்த சொத்துக்களின் மதிப்பு தோராயமாக (அட்டவணை-5) | ரூ. 2,52,52,000 |
| 01.01.2013 முதல் 23.03.2018 வரையிலான காலத்தில் சந்தேக அலுவலர் சேர்த்துள்ள மொத்த சேமிப்பு தோராயமாக (அட்டவணை-6) | ரூ. 13,68,712 |
| சந்தேக அலுவலர் தனது வருமானத்திற்கு அதிகமாக சேர்த்துள்ள மொத்த சொத்துக்களின் மதிப்பு (255 %) | **ரூ. 2,38,83,288** |

**எதிரி திரு.முருகானந்தம் அவரது வருமானத்திற்கு அதிகமாக சேர்த்துள்ள மொத்த சொத்தின் மதிப்பின் சதவீதம்.**

$$\frac{2,38,83,288}{93,56,000} \times 100 = 255\%$$

எதிரி திரு.முருகானந்தமும், அவரது மனைவி திருமதி.லீலாவதியும் சேர்ந்து எதிரி திரு.முருகானந்தத்தின் மனைவி திருமதி.லீலாவதி பெயரிலும், அவரது மகன் திரு.கிஷோர் பெயரிலும், 2013 முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலான குறியீட்டு காலத்தில் சட்டத்திற்கு புறம்பாகவும், தனது வருமானத்திற்கு அதிகமாகவும் ரூ.2,38,83,288/-க்கு அசையும் மற்றும் அசையா சொத்துக்களை வாங்கியுள்ளார்.

பொது ஊழியரான எதிரி திரு.பி.முருகானந்தம், இணை போக்குவரத்து ஆணையர், போக்குவரத்து துறை, கோயம்புத்தூர் மண்டலம், பொறுப்பு நிர்வாகம், போக்குவரத்து ஆணையர் அலுவலகம், சென்னை என்பவரின் மேற்படி குற்றமுறு கெட்ட நடத்தை செய்கையானது ஊழல் தடுப்புச் சட்டம் 13(2) உ/இ 13(1)(e)-ன்படி தண்டனைக் குரிய குற்றமாகும்.

ஆகையால், எதிரி திரு.பி.முருகானந்தம், இணை போக்குவரத்து ஆணையர், போக்குவரத்து துறை, கோயம்புத்தூர் மண்டலம், பொறுப்பு நிர்வாகம், போக்குவரத்து ஆணையர் அலுவலகம், சென்னை மற்றும் திருமதி.லீலாவதி, க/பெ.முருகானந்தம் ஆகியோர் மீது திருச்சி, ஊ.த.க. பிரிவு குற்ற எண்.3/2018, ச/பி 13(2) உ/இ 13(1)(e) ஊழல் தடுப்புச் சட்டம்-1988 மற்றும் 109 இ.த.ச.-ன்படி இன்று 23.03.2018 ஆம் தேதி 12.00 மணிக்கு குற்ற வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை அசல் கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சி அவர்களுக்கும், முதல் தகவல் அறிக்கையின் நகல் காவல் கண்காணிப்பாளர், தென்சரகம், ஊ.த.க. துறை, சென்னை அவர்களுக்கு, வழக்கு புலன் விசாரணை செய்ய உரிய அதிகார அனுமதி வழங்குவதற்காகவும் அனுப்பி வைக்கப்பட்டது. மற்றொரு நகல் வழக்கின் கோப்பிலும் வைக்கப்பட்டது.

23/03/2018
(P. ARULJOTHI)
INSPECTOR OF POLICE,
Vigilance & Anti-Corruption,
TRICHY.